# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்: 04 கணை: 25 மே -2023



**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...**

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...



**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.



**தொடர்புகளுக்கு**
guruseththiram@gmail.com


## உள்ளே


1 ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

2 காட்சியும் கருத்தும்

3 உந்துதல்

6 அணுசக்தியின் ஆற்றல்கள்

8 Big Five Pesonality Test 2

10 போதை பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குவோம்

12 ஊடகங்களும் மொழியும்

14 சிறுவர் உரிமைகளும் துஸ்பிரயோகமும்

15 மாணவர்களை பேணும் விதம்

17 ஆசிரியர் ஒழுக்க கோவை

19 "இன்பா"வின் சிந்தனைத் தொடர்கள் -- 16

20 வழிகாட்டப்பட்ட கண்டறிமுறை

21 வடுக்களும் வலிகளும்

22 பேசும் படங்கள்...!



குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...

**தமிழர் வாழ்வியலும்,**
**மொழியும், பண்பாடு கலாசாரமும்,**
**தற்சார்புப் பொருளாதாரமும்**
**திரண்டிருப்பதே தமிழ்த் தேசியம்!!**

குருசேத்திரம் கணை 25 சஞ்சிகைக்கு ஆசிரியர் தலையங்கத்தை கனத்த இதய உணர்வுகளுடன் எழுதுகின்றேன். எமது இனத்துவத்தின் அடையாளமாக இருந்த கல்விப் பாரம்பரியம் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது. யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையிலும் எம்மால் ஒரு நிறுவனத்தை, நிர்வாகத்தை மக்களின் தேவையை, சமூகசேவையை சிறப்பாக அல்லது மகிழ்ச்சியாக கொண்டு செல்ல முடியாத நிலையிலேயே வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.

எம்மிடம் உள்ள வளங்களின் பாவனை தொடர்பில், தரிசனமிக்க செயற்றிட்டங்களை உருவாக்குவதில் அல்லது நடைமுறைப்படுத்துவதில் பின்னிற்பதானது எம்மைத் தொடர்ந்தும் தங்கியிருக்கும் அல்லது கையேந்தும் சமூகமாக மாற்றிவிடும். மாற்றத்திற்கான ஒரே கருவியாக கல்வியும் உழைப்புமே எம்மிடமுள்ளது. அவற்றை மனப்பூர்வமாக “கசடற” முன்னெடுப்பதன் மூலம் எமது சமூகத்தை முன்னோக்கி நகர்த்த ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். ஒருவரின் முகத்தில் கறை பட்டால் அதனை அவரே அகற்றுவது போல, ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஏற்று அதனை அவர்களாகவே திருத்திக்கொண்டு ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை சேவையாக கருதிச் செயற்படுவதன் மூலம் ஒவ்வொருவரும் தொழிலில் திருப்தியடையலாம்.

மாணவ ஆசிரியர்கள் தங்கள் வாழ்வில் சந்தித்த அர்ப்பணிப்புள்ள வேவையாளர்களை மனதிலிருத்திச் செயல்படுவதன் மூலம் சிந்தனை விருத்தியை விசாலமாக்கிக் கொள்வதுடன் அவர்களது பட்டறிவு அனுபவங்களை எதிர்கால மாணவர்களுக்கு எடுத்துச்சென்று சுயசிந்தனை, சுயசார்புள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

# காட்சியும் கருத்தும்

திரு. சு. பரமானந்தம்





படங்கள் : இணையம்



**“குருசேத்திரம்”** மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது. **குருசேத்திரம் உங்களின் களம்...**

அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

guruseththiram@gmail.com

குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# உந்துதல்

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




## மாணவர்களை சுறுசுறுப்பாகவும் ஈடுபாடாகவும் வைத்திருங்கள்

மாணவர்களிடையே தொடர்புபட்டுச் செயற்படும்போது, அவர்கள் சலிப்படைய மாட்டார்கள். கேள்விகளுக்கு பதிலளிக்க மாணவர்களை எழுமாறாகத் தெரிவுசெய்து, அவர்களின் உள்ளீடு மற்றும் யோசனைகளை நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். மாணவர்களின் தொடர்பு மற்றும் பகிர்வு கற்பித்தல் நேரத்தை மேம்படுத்துகிறது. மற்றும் கற்பவர்களின் அமைப்பாக மாணவர்களை மிகவும் திறம்பட செயல்படத் தயார்படுத்துகிறது. இந்த இயக்கவியலின் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரிக்க வேண்டும். மற்றும் மாணவர் நுண்ணறிவைக் கொண்டாடுவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும்.

The Complete Idiot's Guide to Success as a Teacher நூலிலிருந்து 2005 Anthony D. Fredericks எழுதியது.

## படைப்பாற்றல் மற்றும் பல்வேறு வகைகளை அனுமதிக்கவும்

எழுத்திற்காக ஒரு பகுதியை ஒதுக்குகிறீர்களா? ஒரு தலைப்பை ஒதுக்கும்போது, அறிக்கைகள், கவிதைகள், படைப்பு எழுதும் கதைகள், நாடகங்கள் அல்லது பாடல்கள் போன்ற சொந்த வகையைத் தேர்வுசெய்ய மாணவர்களை அனுமதிக்கவும். மாணவர்கள் தங்களுக்கு பிடித்த எழுத்து வடிவத்தை எடுக்கும்போது, அவர்கள் உள்ளார்ந்த உந்துதலுடன் இருப்பார்கள்.

## வகுப்பு செய்தித்தாளை உருவாக்கவும்

வகுப்பு நிகழ்வுகளைப் வெளிப்படுத்துவதற்கான உள்ளூர் செய்தித்தாளை ஒரு மாதிரியாகப் பயன்படுத்துவதன் மூலம் தற்போதைய நிகழ்வுகளில் ஆர்வத்தை ஊக்குவிக்கவும். ஒவ்வொரு பாடப் பகுதியிலும் வகுப்புத் திட்டங்கள் தலைப்புகள், பைலைன்ஸ், லீட்-இன்ஸ், உள்ளடக்கம் மற்றும் சுருக்கம் பந்திகள் கொண்ட செய்தி கட்டுரைகளாக வழங்கப்படலாம். சொல் விளையாட்டுகள், வானிலை, ஜாதகம் மற்றும் பள்ளிக்குப் பிறகான நடவடிக்கைகள் ஆகியவை கற்பிக்கப்பட்ட உள்ளடக்கத்துடன் ஒருங்கிணைக்கப்படலாம்.

## வகுப்பறையிலிருந்து வெளியேறுங்கள்

ஒரு பூங்கா, அருங்காட்சியகம், அல்லது பாடசாலை நூலகம் என ஒரு புதிய சூழலில் வகுப்பை நடாத்துதல் அல்லது ஒரு குறுகிய விவாதம் கூட மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கான சிறந்த வழியாகும். உங்கள் வகுப்பறைக்கு நீங்கள் திரும்பும்போது, அவர்கள் ஒரு சிக்கல் அல்லது பணிக்கு புதிய அணுகுமுறையைக் காணலாம்.



## ஒரு போட்டியை உருவாக்கவும்

ஒரு போட்டியில் பங்கேற்கவும். அனைவரின் சிறந்த முயற்சிக்கு பாராட்டு இருக்கும் வரை மற்றும் அனைத்து கவனமும் வெற்றியாளரின் மீது மட்டுமே வைக்கப்படுவதில்லை. ஒரு போட்டியானது உற்சாகத்தை உருவாக்க ஒரு சிறந்த வழியாகும். வேறுபட்ட வழிமுறைகளை வழங்குதல்

உங்கள் வகுப்பறையில் மாறுபட்ட திறன்களைக் கொண்ட மாணவர்களை நீங்கள் பெறுவீர்கள் என்பதை அறிவது, அனைவருக்கும் உங்கள் பாடங்களை வடிவமைத்தல் வெவ்வேறு திறன் நிலைகளை கருத்தில் கொண்டு உடனடியாகவும், அடிக்கடி, திறமையாகவும் கருத்துக்களை வழங்கவும்

எந்தவொரு முயற்சியிற்கும் அல்லது முடிக்கப்பட்ட பணிக்கும் (வீட்டுப்பாடம் போன்றவை) மற்றும் உங்களிடமிருந்து வரும் பதிலுக்கும், வாய்மொழி மற்றும் எழுதப்பட்டவற்றுக்கும் இடையேயான நேரடி தொடர்பை மாணவர்கள் காண முடியும். ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட முன்னேற்றத்தை வகுப்பில் உள்ள மற்றவர்களுடன் ஒப்பிடுவதை விட, அவரின் தனிப்பட்ட முன்னேற்றத்தைக் குறிப்பிடுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## இலக்குகளை நிர்ணயிக்க மாணவர்களுக்கு பல வாய்ப்புகளை வழங்குதல்

மாணவர்கள் தங்கள் சொந்தக் கல்வி இலக்குகளை நிர்ணயிக்க பல வாய்ப்புகள் இருக்க வேண்டும். ஒரு பாடம், ஒரு அலகு அல்லது ஆண்டு முழுவதும் பெறக்கூடிய இலக்குகளை நிறுவ அவர்களை அழைக்கவும். ஒரு தலைப்பைப் பற்றி அவர்கள் என்ன கற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். அந்த விஷயத்தைக் கற்றுக் கொள்ள அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்று அவர்களிடம் கேளுங்கள். உளவியலாளர்கள் நமக்காக நாம் நிர்ணயிக்கும் குறிக்கோள்கள் (மற்றவர்கள் நமக்காக நிர்ணயிக்கும்

இலக்குகளுக்கு மாறாக) உள்ளார்ந்த முறையில் அதிக உந்துதல் கொண்டவை என்று கூறுகின்றன. அந்த இலக்குகளைத் தொடர நாங்கள் அதிக முனைப்புடன் இருக்கிறோம், அவற்றை நாம் அடையும்போது கிடைக்கும் வெற்றியில் மகிழ்ச்சி அடைகிறோம்.

### வேடிக்கையாக நாள் தொடங்க

ஒரு இனிமையான குறிப்பில் நாள் தொடங்கவும்: ஒரு வேடிக்கையான வீடியோ, ஒரு சிறிய கேள்வி அல்லது வேடிக்கையான உண்மை மாணவர்களுக்கு கற்றலின் பொழுதுபோக்கு பக்கத்தைப் பார்க்க உதவும்.

### சாதனைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

மாணவர்கள் தங்கள் சாதனைகளை பெரிய பள்ளி சமூகத்துடன் பகிர்ந்து கொள்ள வகுப்பு மற்றும் வகுப்பினருடன் பகிர்ந்து கொள்ள ஏராளமான வாய்ப்புகளை வழங்குதல். முழு வகுப்பறையின் முயற்சிகளை ஊக்குவிக்க ஸ்கிட்ஸ், நாடகங்கள், வாசகர்கள் தியேட்டர் தயாரிப்புகள், நூலக காட்சிகள், புல்லட்டின் பலகைகள், ஒரு வகுப்பு செய்தித்தாள் அல்லது செய்திமடல் அல்லது பிற ஊடகங்களைப் பயன்படுத்தவும்.

*****

## வாசகர் உள்ளத்திலிருந்து...

Forwarded

குருச்சேத்திரம் ஏப்ரல் 2023
ஆசிரிய தலையங்கம் - நீங்கள் குறிப்பிட்டது "தகவல்களின் அடிப்படையில் கருத்துவாக்கம் செய்து -----------------இதனால் பரீட்சையில் வெற்றிபெற்றாலும் , வாழ்க்கையில் ------------பல சவால்களை -------இளம் சமுதாயத்தினை -------- காணக்கூடியதாயுள்ளது". வாசிப்பு --- பழக்கம் முழுமையாக கிரகிக்கும் தன்மை குறைவடைந்து வருகிறது

"காட்சியும் கருத்தும்" தரவுகளில் தமிழ் மூலம் கற்பவர்களின் reading வீதம் மிகவும் குறைவு அடிமட்டத்தில் இருக்கின்றது.

"மனிதனை மனிதன்" -சாதி சாபம் சி. டஜனாவின் கட்டுரை பாராட்டத்தக்கது.

ஆசிரியரின் வகைகள் - சிறப்பான அணுகுமுறை

check yourself good lesson neighbourhood flowers -------

சந்தர்ப்பத்துக்கு நன்றி





# அணுசக்தியின் ஆற்றல்கள்

- ரகுநாதன் டுஷன்தன், ஆரம்பப்பிரிவு -

உலகளாவிய ரீதியில் இன்று அணுசக்தி பற்றித் தெரியாதவர்கள் இல்லை என்று கூறலாம். அணுசக்தி என்று கூறும் போது அழிவுகள்தான் எம் மனதில் நிழலாடுகின்றன. எனினும் பெருமளவு ஆக்கப் பணிகளுக்கு அணுசக்தியை உபயோகிக்கும் விழிப்புணர்வு களும், செயற்றிட்டங்களும் நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன.

எரிபொருள் சக்தி வளத்திற்கு மாற்றீடாக அணு ஆற்றலைக் கொண்டு பெருமளவு மின்சக்தியைப் பிறப்பாக்கும் அணு உலைகளின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. அணு உலைகளில் 1000 கிரோம் யூரேனியத்திலிருந்து பெறக்கூடிய அணு ஆற்றல் சக்தி 2000 டன்கள் நிலக்கரியின் ஆற்றலுக்குச் சமமாகும். ஆகையால் உற்பத்திச் செலவு குறைந்த, பெருமளவு பொருளுற்பத்தி பெறக்கூடிய வழியாக அணுசக்தி உள்ளது.

இரண்டாம் உலகப்போரில் யப்பானில் ஏற்பட்ட அணுகுண்டு அழிவால் இன்று வரை புல் பூண்டுகள் முளைக்காத பாழ்நிலமாக ஹிரோசீமாவும், நாகசாகியும் காட்சியளிக்கின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அணுக்குண்டு பயன்படுத்தப்படவில்லை என்றாலும் கூட அமெரிக்கா, ரஸ்யா, பிரான்ஸ், சீனா, இந்தியா ஆகிய நாடுகள் அணுக்குண்டுப் பரிசோதனையை நடாத்தியுள்ளன. இரகசியமாய்ப் பல நவீன அணு ஆயுதங்களும் ஏவுகணைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. உலகின் ஏனைய நாடுகளும் அணு ஆயத உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றன.

எனினும் அணு சக்தியை ஆக்க சக்தியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு உலகின் எல்லா மக்களிடையேயும் எழத் தொடங்கியுள்ளது. விண்வெளி ஆய்வுத் திட்டங்களுக்கு சக்தி வளத்தைப் பெறவும், அணு சக்தியைப் பயன்படுத்தும் திட்டங்கள் தற்போது விரிவாகி வருகின்றன. ரஸ்யாவில் கஸ்பிரியன் கடலின் கிழக்குக் கரையில் மிக வரண்ட பாலை நிலத்தில் ஷெவ்சேன்கோ என்ற நகரம் உள்ளது. மிக மிக வரண்ட வெப்பமான காலநிலைச் சூழலில் இந்த நகரம் செழிப்பாகப் பச்சைப்பசேல் என்று காட்சியளிப்பது வியப்பாக உள்ளது. இது இயற்கையின் இயல்பு அல்ல. மனிதர்களின் சாதனையாகும். ஷெவ்சேன்கோ நகரில் அணு மின்சார நிலையம் இருப்பதால் இவ் அணுமின் நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சக்தி முழுவதும் உப்பு நீரை நன்னீராக மாற்றுகின்ற பாரிய தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கின்றது. இவ்வாறு மாற்றப்படும் நன்னீரானது மக்கள்

குடிப்பதற்கும், துணிகளைத் துவைப்பதற்கும், பூங்காக்கள் பயிர் வகைகளுக்குப் பாய்ச்சவும் பயன்படுகின்றது. இவ்வாறு வளங்கள் அற்ற ஒரு பாலைவனப் பகுதியில் இயற்கையின் எழில் பூக்கும் சோலைகள் உருவாக அணு சக்தியே பயன்படுத்தப்படுகின்றது.



துருவப் பகுதிகளினூடாகப் பிரயாணம் செய்யும் கப்பல் களுக்கு பனிக்கட்டிகள் இடையூறு செய்கின்றன. இவ்வா றான இடங்களில் பனிக்கட்டிகளை உடைத்துப் பிரயாணம் செய்யக்கூடிய அணுசக்திக் கப்பல்கள் இப்போது பாவ னைக்கு வந்துவிட்டன. அத்துடன் அணு ஆற்றலால் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்களும் பெருமளவு பயன்படுத் தப்பட்டு வருகின்றன.

நவீன கைத்தொழில் விஞ்ஞான மருத்துவத்துறை களில் அணுசக்தி சிறந்த முறையில் பயன்படுகிறது. பல கைத்தொழிற்சாலைகளை இயக்கும் மின்சக்தி அணுசக்தி யிலிருந்து பெருமளவு பிறப்பிக்கப்படுகிறது.

தற்போது மனிதன் அழிவுப் பாதையை விட்டு ஆக்க வழியில் அணு சக்தியைப் பயன்படுத்த முனைகிறான். அணுக்கருவில் அடங்கியிருக்கும் ஆற்றலை ஒரு வெடிப்பின் மூலம் பாழாக்காமல் அதை அடக்கி மனிதகுல மேம்பாட்டிற்காக நெறிப்படுத்தலாம். இவ்வாறு ஆற்றலை நெறிப்படுத்தும் அமைப்பை அணு உலை என்பர். இன்று சிறிய வகை அணு உலைகள் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்களும் பெரிய அணுஉலைகள் மூலம் மின்சாரம், வெப்பசக்தி பெறவும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான அணு உலை அமைப்புக்கள் மிகப் பாதுகாப்பாகவே தயாரிக்கப்படுகின்றன. ஏதும் விபத்துக்கள் ஏற்பட்டால் பேரழிவுகளுக்கு ஏதுவாகலாம். உயிரினங்க ளுக்கும் மிகப்பெரிய தாக்கங்களும் ஏற்படும். எனவே அணுசக்தியைப் பயன்படுத்துவது மிக அவதானமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களால் அணுசக்தியைப் பயன்படுத்தும் போது மேலதிக பாதுகாப்புக்களை வழங்கும் ஏற்பாடுகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

*****

*"தனியாள் ஒருவரின் ஆளுமை அவரது தொழில் வாழ்க்கையில் மட்டுமன்றி அவரது தனிப்பட்ட வாழ்க்கையிலும் செல்வாக்குச் செலுத்தும்"*




# Big Five Pesonality Test 2

G.Gajooran, Lactuere,
Jaffna National college of Education

முன்னர் குறிப்பிட்ட 50 வினாக்கொத்துக்களையும் பின்வரும் மாதிரிக்கமைய தயாரித்து 7 நிமிடங்களுக்குள் விடையளிக்கச் செய்தல்.

| S.No | Questions | Disagree | Slightly disagree | Neutral | Slightly agree | Agree |
|---|---|---|---|---|---|---|
| 1 | I am the life of the party. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 2 | I feel little concern for others. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 3 | I am always prepared. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 4 | I get stressed out easily. | 1 | 2 | 3 | 4 | 5 |

E = 20 + (1)____ - (6) ____ + (11)____ - (16)____ + (21)____ - (26)____ + (31)____ - (36)____ + (41)____ - (46)____ = ______

A = 14 - (2)____ + (7) ____ - (12)____ + (17)____ - (22)____ + (27)____ - (32)____ + (37)____ + (42)____ + (47)____ = ______

C = 14 + (3)____ - (8) ____ + (13)____ - (18)____ + (23)____ - (28)____ + (33)____ - (38)____ + (43)____ + (48)____ = ______

N = 38 - (4)____ + (9) ____ - (14)____ + (19)____ - (24)____ - (29)____ - (34)____ - (39)____ - (44)____ - (49)____ = ______

O = 8 + (5)____ - (10) ____ + (15)____ - (20)____ + (25)____ - (30)____ + (35)____ + (40)____ + (45)____ + (50)____ = ______

மேற்படி அட்டவணைப்படி புள்ளி வழங்கப்பட்டு பெறப்படும் புள்ளியானது உயர்ந்தபட்சம் 40 ஆகக் காணப்படும். பின்னர் அதனை வீதமாக்க வேண்டும்.

## Openness - வெளிப்படைத் தன்மை

திறந்த மனப்பான்மை உள்ளவர்கள் பரந்த அளவிலான ஆர்வங்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் உலகம் மற்றும் பிற நபர்களைப் பற்றி ஆர்வமாக உள்ளனர், மேலும் புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளவும் புதிய அனுபவங்களை அனுபவிக்கவும் ஆர்வமாக உள்ளனர். சவால்களை எதிர்கொள்பவர்.

இந்த ஆளுமைப் பண்பில் உயர்ந்தவர்கள் சாகச மற்றும் படைப்பாற்றல் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். மாறாக, இந்த ஆளுமைப் பண்பில் குறைந்த நபர்கள் பெரும்பாலும் மிகவும் பாரம்பரியமானவர்கள் மற்றும் சுருக்க சிந்தனையுடன் போராடலாம்.

## Conscientiousness - மனச்சாட்சியுள்ள தன்மை

விவரங்களை கவனத்தில் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் முன்கூட்டியே திட்டமிடுகிறார்கள், அவர்களின் நடத்தை மற்றவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றி சிந்தித்து, காலக்கெடுவை கவனத்தில் கொள்கிறார்கள்.

இந்த முதன்மை ஆளுமைப் பண்பில் குறைவான மதிப்பெண்கள் பெற்ற ஒருவர் குறைவான கட்டமைப்பு மற்றும் குறைவான ஒழுங்கமைக்கப்பட்டவர். அவர்கள்

காரியங்களைச் செய்து முடிக்கத் தள்ளிப்போடலாம், சில சமயங்களில் காலக்கெடுவை முழுவதுமாக இழக்க நேரிடும்.

### Extroversion - புறநோக்குத் தன்மை

இது உற்சாகம், சமூகத்தன்மை, பேசும் தன்மை, உறுதியான தன்மை மற்றும் அதிக அளவு உணர்ச்சி வெளிப்பாடு ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் ஒரு ஆளுமைப் பண்பாகும். இப்பண்பு உள்ளவர்கள் வெளிச்செல்லும் மற்றும் சமூக சூழ்நிலைகளில் ஆற்றலைப் பெற முனைகின்றனர். மற்றவர்களுடன் இருப்பது அவர்களை உற்சாகமாகவும் உற்சாகமாகவும் உணர உதவுகிறது.

இந்த ஆளுமைப் பண்பில் குறைவாக உள்ளவர்கள் அல்லது உள்முக சிந்தனை கொண்டவர்கள் அதிக ஒதுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். சமூக அமைப்புகளில் செலவழிக்க அவர்களுக்கு குறைவான ஆற்றல் உள்ளது மற்றும் சமூக நிகழ்வுகள் வடிகட்டுவதை உணரலாம். உள்முக சிந்தனையாளர்களுக்கு "ரீசார்ஜ்" செய்ய தனிமை மற்றும் அமைதியான காலம் தேவைப்படுகிறது.

### Agreeableness - ஏற்றுக்கொள்ளும் தன்மை

இந்த ஆளுமைப் பண்பு நம்பிக்கை, நற்பண்பு, இரக்கம், பாசம் மற்றும் பிற சமூக நடத்தைகள் போன்ற பண்புகளை உள்ளடக்கியது. ஒத்துப்போகும் தன்மையில் உயர்ந்தவர்கள் அதிக ஒத்துழைப்பைக் கொண்டவர்களாக இருப்பார்கள், அதே சமயம் இந்த ஆளுமைப் பண்பில் குறைவாக இருப்பவர்கள் அதிக போட்டித் தன்மையுடனும் சில சமயங்களில் கையாளக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

### Neuroticism - எதிர்மறை மனவெழுச்சித் தன்மை

எதிர்மறை மனவெழுச்சித் தன்மை என்பது சோகம், மனஅழுத்தம் மற்றும் உணர்ச்சி, உறுதியற்ற தன்மை ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் ஒரு ஆளுமைப் பண்பாகும். எதிர்மறை மனவெழுச்சித் தன்மை அதிகமாக இருக்கும் நபர்கள் மனநிலை மாற்றங்கள், பதட்டம், எரிச்சல் மற்றும் சோகத்தை அனுபவிக்கின்றனர்.

இந்த ஆளுமைப் பண்பில் குறைவாக இருப்பவர்கள் மிகவும் உறுதியானவர்களாகவும் உணர்ச்சி ரீதியில் நெகிழக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

எனவே, இவ் ஆளுமைப் பரீட்சையில் ஒருவர் ஒவ்வொரு பிரிவிலும் பெறும் புள்ளிகளைக் கொண்டு 50 வீதத்திற்கு அதிகமாக பெற்றிருந்தால் நேர் ஆளுமையும் குறைவாகப் பெற்றிருந்தால் எதிர் மறை ஆளுமையும் காணப்படும் அதேவேளை, எதிர்மறை மனவெழுச்சியில் இது மாறிக் காணப்படும்.

முற்றும்

# போதை பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குவோம்

**- சர்மிளா ராஜரத்தினம், இசைத்துறை -**



இன்றைய இளம் தலைமுறையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக போதைப்பொருள் பாவனை இருக்கின்றது. இது இளம் தலைமுறை இனத்தின் எதிர்காலத்தை திசைமாற்றி அவர்களை தவறான பாதையில் தள்ளி விடுகின்றது. இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவால்களில் ஒன்று போதைப்பொருள் பாவனை ஆகும். பொழுதுபோக்காகவும் சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோஷத்திற்காகவும் பயன்படுத்தப்படும் இந்த போதைப் பொருட்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவித்து உயிரிழப்புகளை ஏற்படுத்துவதோடு சமூகத்தில் பல சீர்கேடுகளையும் தோற்றுவிக்கின்றன. இந் நிலையில் போதைப்பொருட்களின் பாவணையை தடுத்து நிறுத்துவதும் அவை தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமாகும். போதை பொருட்கள் ஆனவை பயன்படுத்தப்படும் போது அவற்றிற்கு அடிமையாகி நாளடைவில் அவை இன்றி வாழ முடியாத நிலையை உருவாக்கும். இவ்வாறான போதைப் பொருட்களுக்கு உதாரணமாக மதுபான வகைகள், புகையிலை, கஞ்சா போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றுள் மதுபானம் அனைவராலும் பரவலாக பயன்படுத்தப்படும் ஒன்றாகும். மதுபானத்திற்கு அடிமையாகி அதனைப் பயன்படுத்துவோர் தவிர நாகரிக மோகத்தாலும், சமூக ரீதியாக தங்களுடைய செல்வச் செழிப்பைக் காட்டிக் கொள்வதற்காகவும், மதுவை பயன்படுத்துவோரும் உள்ளனர். கஞ்சா போதை பொருள் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது பயன்படுத்துவதால் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இவ்வனைத்து போதை பொருட்களுமே மனிதனுக்கும் மனித உயிருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இன்றைய இளம் சமுதாயம் பரவலாக போதை பாவனைக்கு உட்பட்டு வருகின்றது. விளையாட்டாக ஆரம்பிக்கும் பழக்கம் நாளடைவில் உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்றன. இளம் தலைமுறைகாக கருதப்படுகின்ற மாணவர்கள் போதை பாவனைக்கு அடிமையாக மாறி வருவது தற்போது பேசு பொருளாக மாறி உள்ளது. மாணவர்கள் போதை வஸ்துக்களுடன் கைது செய்யப்படுவதும் போதை பொருட்களை பயன்படுத்திவிட்டு சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு மாட்டிக் கொள்வதும் பத்திரிகைகளில் அன்றாட செய்திகளாக மாறிவிட்டன. மாணவர்கள் போதை பழக்கத்திற்கு அடிமையாவதற்கான பிரதான காரணமாக அமைவது அவர்களின் வீட்டு சூழலே ஆகும். வீட்டில் வசிக்கும் யாராயினும் ஒரு நபர் மதுபானம் புகையிலை

போன்றவற்றை பயன்படுத்துவோராக இருந்தால் அவ் வீட்டில் வசிக்கும் சிறுவர்களும் அதனை பயன்படுத்த தூண்டப்படுவர். பெற்றோர்கள் தமது பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே எவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றார்கள், யார் யாருடன் நட்புக் கொள்கின்றார்கள் என கண்காணிக்க தவறிவிடுகின்றார்கள். இதனால் போதை பொருட்களை விற்பனை செய்வோர் இளம்பராயத்தினரை இலக்கு வைத்து தமது வியாபாரத்தை மேற்கொள்ள இலகுவாக உள்ளது. அத்தோடு போட்டி சூழலை எதிர்கொள்வதில் உள்ள பயம், தகாத நட்புக்கள், குடும்பம் மற்றும் சமுதாய பிரச்சினைகள், அதீத பணப்புழக்கம் மற்றும் கவனிப்பாறற்ற நிலை ஆகியன இளம் பருவத்தினரை போதைப் பொருட்களை நோக்கி இழுத்துச் செல்கின்றன.

தற்போது ஒவ்வொரு வீதிகளில் காணப்படும் சிறுகடைகள் தொடங்கி அனைத்து கடைகளிலும் மதுபானங்களும், சிகரெட், புகையிலை போன்ற புகைத்தல் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனை தடுக்க கடுமையான சட்ட திட்டங்கள் இயற்றப்பட்டுள்ள போதும் அதனை கட்டுப்படுத்துவது என்பது சவாலான ஒன்றாகவே காணப்படுகிறது. பொது இடங்களில் மதுபானம் அருந்துவதோ, சிகரெட் புகைப்பதோ கூடாது என்பது பரவலாக கடைபிடிக்கப்படும் விதிமுறை ஆகும். ஆனால் அதனை புறக்கணித்து சமூக அக்கறை அற்று பொதுமக்கள் கூடும் இடங்களில் இத் தகைய தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் காணலாம். இதற்கெல்லாம் முதற்காரணமான போதை பொருட்கள் கிடைப்பதை மட்டுப்படுத்தினால் மாத்திரமே போதையற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும். சாதாரண மக்களின் வாழ்க்கையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவது இந்த போதை பொருளாகும். ஆக போதை பொருட்களின் அதிக வரியினை விதிப்பதும் சட்ட திட்டங்களை கடுமையாக்குவதும் போதைப்பொருட்களை ஒழிப்பதற்கான வழியாகும். நாட்டிற்கும் வீட்டிற்கும் கேடு விளைவிக்கும் போதை பொருட்களின் பாவனையை தடுத்து நிறுத்துவதோடு அவற்றை முழுதாக ஒழிக்க வேண்டும். தடைசெய்யப்பட்ட போதை பொருட்களை விற்போருக்கு சிறைத் தண்டனைகளை வழங்குவதோடு 18 வயதிற்கு குறைவானவருக்கு மதுபானம், சிகரெட் போன்றவற்றை விற்பனை செய்பவருக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும். இவ்வாறு அரசோடு சேர்ந்து மக்களாகிய நாமும் விழிப்புணர்வோடு செயல்பட்டு புதிய உலகை உருவாக்குவோம். போதை பொருளை ஒழிப்போம் நாட்டு உயிரை காப்போம்.

*****



# ஊடகங்களும் மொழியும்

**- ஜெகதீசன் சமந்தியா, ஆரம்பக் கல்வி -**



ஒரு விடயத்தைத் தாங்கிச் சென்று வெளிப்படுத்தும் சாதனமே ஊடகம் எனப்படும் தொடர்பாடலுக்கான கருவிகளையே பொதுவாக ஊடகம் என்று அழைப்பர். ஊடகங்களை அச்சு ஊடகங்கள், மின்னியல் ஊடகங்கள் என்று இரண்டு வகைபடுத்தலாம். இந்த இரண்டு வகை ஊடகப் பிரிவுகளுக்கும் மொழி ஆதாரமாக அமைகின்றது. அந்த வகையிலே ஊடகங்களுக்கும் தொழிலுக்கும் மொழிக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வது பயனுடைய செயலாகும். தமிழ் மொழியினை அச்சு ஊடகங்கள், மின்னியல் ஊடகங்கள் ஆகிய இரண்டு ஊடகப் பிரிவுகளும் பயன்படுத்துகின்றன. அச்சு ஊடகங்கள் எந்த வகையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிற்றிதழ்கள், துண்டு பிரசுரங்கள், அறிக்கைகள், புதினங்கள் என்பன வாகும். மின்னியல் ஊடகங்கள் என்ற வகையில் வானொலி தொலைக்காட்சி இணையம் முதலானவற்றை குறிப்பிடலாம்.

ஊடகங்களிலே எழுத்து தமிழும் பேச்சு தமிழும் பின்பற்றப்படுகின்றன. பெரும்பாலும் அச்சு ஊடகங்களில் எழுத்து தமிழே பயன்படுத்தப்படுகின்றது. செய்திகளினை எளிமையாகவும் கருத்தாழம் மிக்கதாகவும் முழுமையாகவும் வெளியிட வேண்டிய தேவை அச்சு ஊடகங்களுக்கே உள்ளது. தமிழ் மொழியை செய்யுளின் பிடியிலிருந்து விடுவித்து உரைநடை நோக்கி நகர்த்தியதில் அச்சு ஊடகங்களுக்கு பெரும் பங்கு உள்ளது. மேலும் தமிழ் மொழியை எளிமைப்படுத்தி பாமர மக்களுக்கும் வாசிப்பு திறனுக்கு ஏற்ப செம்மைப்படுத்தியமை ஊடகங்களின் முக்கியமான பங்களிப்புகள் ஆகும். கவரத்தக்க வகையிலான வாக்கிய அமைப்பு தேர்ந்த சொல்லாட்சியும், அலங்காரங்களோ தேவையற்ற வர்ணிப்புக்களோ இல்லாமையினால் கச்சிதமான மொழி அமைப்பு என்பன ஒழுங்கு பெறுவதற்கு ஏற்ப அச்சு ஊடகங்களே பெரும் பங்கு வகிக்கின்றன. மேலும் அச்சு ஊடகங்களில் பெரும்பான்மையாக எழுத்து மொழி பின்பற்றப்படுகின்ற போதிலும் சஞ்சிகைகள் மற்றும் சிற்றிதழ்களான சிறுகதை, தொடர் கதை நகைச்சுவை துணுக்குகள் முதலானவற்றில் அதிகமாக பேச்சு மொழியே பயன்படுத்தப்படுகின்றமை காணக்கூடியதாக உள்ளது.

மின்னியல் ஊடகங்கள் மொழியை கையாளுகின்ற விதமானது அச்சு ஊடகங்கள் கையாள்வது போன்றதல்ல அது வேறுபட்டதாகும். மின்னியல் ஊடகங்களான தொலைக்காட்சி வானொலி போன்றவற்றில் செய்தி வாசிக்கின்ற போது புதிய செயல் நிலைகளில் மாத்திரமே எழுத்துக்கள் வழக்கமானது பின்பற்றப்படுகின்றது. மேலும் பெரும்பாலான மின்னியல் ஊடகங்களிலே நிகழ்ச்சி நிரல்களில்

பேச்சு வழக்குக்கு முதன்மை இடம் கொடுக்கப் படுகின்றதனைக் காணமுடிகின்றது. குறிப்பாக நேயர் விருப்பம் முதலான நிகழ்ச்சிகளில் பிரதேச பேச்சு வழக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதனை காணமுடிகின்றது.

மின்னியல் ஊடகங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பெரிதும் உகந்தது அல்ல. அதாவது தொலைக்காட்சி வாசிப்பாளர்கள் தமிழ் மொழியினை உச்சரிக்கின்ற போது ஏற்படுகின்ற தவறே காரணமாகும். உதாரணமாக, தமிழ் என்பதை உச்சரிக்கின்ற போது "தமில், தமிள்" என உச்சரிக்கின்றமை காணமுடிகின்றது. மேலும் இரண்டு சொற்களுக்கு இடையே ஆங்கிலச்சொல்லை இட்டு தமிழ் இல்லாமல் ஆங்கிலமும் இல்லாமல் இரண்டும் கெட்டான் நிலையிலான மொழி அமைப்பில் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் பயன்படுத்துகின்றார்கள். இந்நிலையானது நிச்சயமாக தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல.

மேலும் ஊடகங்கள் மொழியை வெகுசன தொடர்பாடலுக்கு ஏற்ற வகையில் வளர்த்தெடுக்கின்றமை முக்கியமானது. மக்களின் பாரம்பரிய வழக்காறுகளில் உள்ள சொற்களைக் கையாள்வதன் மூலம் வெகுசனத் தொடர்பாடலை ஊடகங்கள் வலுப்படுத்துகின்றன. அச்சு ஊடகங்களில் மொழிசார் பக்கங்களுக்கு முதன்மை கொடுக்கின்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது. கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள் முதலானவை அச்சு ஊடகங்களில் வெளிவந்து மொழியைச் செம்மைப் படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலங்களில் வெகுசன தொடர்பு ஊடகங்களான ஆனந்த விகடன், குமுதம், குங்குமம் முதலிய தென்னிந்திய சஞ்சிகைகளிலும் மொழியை அதற்குரிய நேர்த்தியோடு கையாள்வதை விடுத்து, மலினப்படுத்துகின்ற வகையில் மொழியைப் பயன்படுத்தி வருகின்றமை வருந்தத்தக்கது. இருப்பினும் சிற்றிதழ்களான உயிர்மை, காலச்சுவடு முதலானவற்றில் இலக்கியப் பிரஞ்ஞையோடு கூடிய மொழிநடையானது கையாளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஊடகங்களில் கையாளப்படுகின்ற மற்றுமொரு சிறப்பு கருத்துக்களைத் தெளிவுபடுத்துகின்ற தன்மையாகும். தினசரிப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள் என்பவற்றில் பயன்படுத்தப்படும் மொழி எளிமையாகவும் சொற்சுருக்கம் கொண்டதாகவும் அமைவது சிறந்ததாகும்.

வாசகர்களை குழப்புவது போன்ற மொழி அமைப்பு ஊடகங்களின் பெருந்தோள்விக்கு வழி வகுக்கும். வெகுசன ஊடகங்கள் தற்காலத்தில் தம்முடைய விற்பனைக்காக மொழியின் பரப்பை தாம் எண்ணப்படி பயன்படுத்திக் கொண்டு வருகின்றமையினை காண்கின்றோம். நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மொழியையும் கட்டமைப்பையும் ஊறு செய்கின்ற வகையில் செயல்படுகின்ற வேளையில் மொழியை காக்கின்ற பெரும் பங்கு ஊடகங்களையே சார்ந்தது. இதை அறிந்து ஊடகங்கள் மொழியை அதன் சிறப்பு குறையாதவகையில் பயன்படுத்த வேண்டும் என்பதே மொழிப் பற்றாளர்களின் அவா ஆகும்.

*****

# சிறுவர் உரிமைகளும் துஸ்பிரயோகமும்

- எஸ்.நிவேதா, ஆரம்பக் கல்வி -

தேசத்தின் எதிர்கால தூண்களாகவும் நாளைய வரலாற்றை செதுக்கும் சிற்பிகளாகவும், வருங் கால வாழ்வியல் சாதனைக்கரையில் கொளுவியிருக்கும் கலங்கரை விளக்குகளாகவும் சிறுவர்கள் போற்றப்படு கின்றனர். 18 வயதுக்கு குறைந்த பிரிவினரே சிறுவர்களாக



சுட்டிக்காட்டப்படுகின்றனர். உடல் ரீதியாகவும் உளரீதியா கவும் பூரண வளர்ச்சி பெறாத, தங்களைத் தாங்களே வழிபடுத்தி செல்லும் ஆற்றலற்ற அகவையினை கொண்ட மைந்துள்ளனர். இவர்களுக்கு துல்லியமான வழிகாட்டலும் போதிய பாதுகாப்பும் அளிப்பது சமூகத்தின் கட்டாய கடமை ஆகும். மூன்றாம் முறைகளான இவர்கள் முழு நிலவாக பிரகாசிக்க செய்ய வேண்டியது ஒவ்வொரு தனிமனிதனதும் பொறுப்பாகும்.

அடிப்படை மனித உரிமைகளாக சுட்டிக் காட்டப் படுகின்ற பலவற்றை சிறுவர்களும் பெற்றுள்ளனர். உயிர் வாழும் உரிமையும் உயிர் காப்புரிமையும் பிறப்பும், பிறப்பு பதிவும் பெயர் பெறும் உரிமையும் இவர்களுக்கு உண்டு மேலும் தேசிய இன உரிமை பராமரிப்பு உரிமை சுய சிந்தனை சுதந்திரம் என்பனவும் காணப்படுகின்றது கல்வி சுகாதாரம் விளையாட்டு ஓய்வு போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளலாம் பெற்றோரின் வழிகாட்டலில் விரும்பிய ஓர் இனத்தை மதத்தை பின்பற்றலாம் பெற்றோருடன் சேர்ந்து வாழவும் பெற்றோர் பிரியும் இடத்து இருவருடனும் உறவைப் பேணிக் கொள்ளவும் உரிமை உண்டு. கருத்து வெளியிடவும் சமூக நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவும் சுதந்திரமாக வைத்திருக்கவும் சுதந்திரம் வழங்கப் பட்டுள்ளது. சங்கங்களை அமைக்கவும் அங்கத் துவம் பெறவும் செய்யலாம் போதைப்பொருள் பாலியல் வன்முறை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு பெறவும் உரி மை பெற்றுள்ளனர். சர்வதேச ரீதியில் சிறுவர்களின் மீதான அக்கறை அதிகரித்த வண்ணமே உள்ளது. 1904ஆம் ஆண்டு ஜெனிவாவில் சிறுவர்களை பாதுகாக்க சர்வதேச பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. சட்டரீதியான அங்கீகாரம் பெறாமையால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்னர் 1959ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால்

சிறுவர் நலனை பாதுகாக்கும் வகையில் சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இதுவும் சட்ட வலுவற்றதாகவே அமைந்தது. 1979ஆம் ஆண்டு சர்வதேச சிறுவர் ஆண்டாக பிரகடனப்படுத்தியதை தொடர்ந்து அனைவரும் விழிப்புணர்வு பெற்றனர். 1990ஆம் ஆண்டு ஜனவரி 26 இல் 60 நாடுகள் கையெழுத்திட்டன. ஒரே நாளில் அதிக நாடுகள் கையெழுத்திட்ட சாசனம் என்ற பெருமையினை சிறுவர் உரிமை சாசனம் பெற்றது.

10 கோடிக்கும் மேற்பட்ட சிறுவர் ஆரம்ப அறிவு பெற வாய்ப்பு இன்றியும் 16 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வறுமையில் வாடுவதாகவும் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. வீதியோரங்களில் வாழ்க்கை நடத்தும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பெற்றோரின் அக்கறையின்மையால் பெற்றோரை பாதிக்கும் ஏமக்குறைவு நோய்க்கு (எயிட்ஸ்) உள்ளாகின்றனர். இலங்கையில் வறுமை, குடும்ப வன்முறை, பராமரிப்பின்மை, பெற்றோர் மதுபாவனை, தாய் வெளிநாடு செல்லல் போன்ற காரணிகளால் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதனால் கல்வியில் இடைவிலகல் இலக்கின்றி அலைதல் போதைப்பொருட் பாவனை போன்ற குற்றங்கள் உயர்கின்றன.

சிறுவர் உரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குழந்தைப் பூக்களை இம்சைப்படுத்தாது, வேலைச் சுமையைத் திணிக்காது மெல்லுணர்வுடன் கையாளும் சமுதாயம் கட்டியெழுப்பப்படும். சமுதாய இழிவுகளை களைந்து ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் திடசங்கற்பம் பூணட்டும். பிஞ்சு நிலாக்களின் இருள் கவிழ்ந்த வானம் விடிவெள்ளி காணட்டும். *****

# மாணவர்களை பேணும் விதம்

**- டஜானா சிவராசா, ஆரம்பிரிவு -**

ஹார்வார்ட் பல்கலைக்கழகம் நடத்திய மானுடர்களுக்கான மிகப்பெரிய ஆய்வுகளில் ஒன்றான Harvard Grant Study எனும் ஆய்வில்,

குழந்தைகளை அன்றாட வீட்டுப் பணிகளில் இருந்து விலக்கி வைப்பது பெரும் அபத்தம் எனவும், இதனால் அவர்களது பலவகையான ஆற்றல்களின் ஆக்கங்கள் குறைபடும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், படிப்பு, கற்றல், போட்டித் தேர்வு, தரவரிசை, மதிப்பெண், மதிப்பீடு, பல்வேறு கலை கற்றல் இவை அனைத்திற்கும் தேவைப்படும் ஆக்கமும், ஊக்கமும், மன தைரியமும், நம்பிக்கை தூண்டலும், வெற்றி, தோல்விகளைப் பகுத்தறியும் பக்குவமும், உடனிருப்போருடன் உறவாடும் உளவியலும், நிச்சயமாக வீட்டில் நடத்திடும் நடத்தைகளே தீர்மானிக்கும் என்கிறது இந்த ஆய்வு..!



மாறாக, சிறு வேலைகளைக் கூட செய்திட முடியாமல் இருக்க, செய்ய அனுமதிக்காத பெற்றோர்களை இந்த ஆய்வு எச்சரிக்கிறது.

இல்லை, நான் அவர்களை வேலை வாங்கச் சொல்லவில்லை. மாறாக, வாழ்க்கையின் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு அவற்றோடு சேர்ந்து நடக்கக் கற்று கொள்ளச் சொல்கிறேன். உங்கள் அன்றாட வேலைகளில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளத்தான் சொல்கிறேன். தினமும் பள்ளி செல்லும் குழந்தைகளானால், அவர்களது தண்ணீர் பாட்டிலை அவர்களே நிரப்பச் செய்யுங்கள், அவர்களின் உணவுத் தட்டை அவர்களே எடுத்து வந்து உணவை வாங்கி, தானாக உண்ணச் செய்யுங்கள். அவர்கள் தலை சீவுவது, காலணி அணிவது, அதற்கான பாலிஷ் போடுவது, வார விடுமுறைகளில், வீட்டின் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்தல், செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல், கார் (அ) பைக் கழுவ உதவுதல், படுக்கை உறை மாற்றுதல், வாஷிங் மெசினில் அவர்கள் துணிகளை எடுத்துப் போடுதல், வெயிலில் காய்ந்த துணிகளை மடித்து வைத்தல், சமையலுக்குக் காய்கறி கழுவுதல், குளிர்சாதனப் பெட்டியைச் சுத்தம் செய்தல், சமையலறைப் பொருட்களை அடுக்குதல், என சின்னச் சின்ன வேலைகளை வாரக் கடமையாக்கிடுங்கள். அவர்களை அன்றாட வாழ்வியலிலிருந்து அன்னியப்படுத்திடாதீர்கள்.

இவ்வனைத்திற்கும் ஓர் அழகான சன்மானம் வாரா வாரம் வழங்கிடுங்கள், இது அவர்களை மேலும் ஊக்குவிக்கும். பணத்தின் அருமையையும், அதைச் சேமிப்பதையும் உணர வைக்கும். அவர்கள் விரும்பும்படி ஏதேனும் ஓர்பொழுது போக்கை அமைத்துக் கொடுத்தல் மீன் தொட்டி, பறவை, நாய்க்குட்டி, புறாக்கள், பூச்செடி கொடிகள் ஆகியவற்றைப் பராமரிக்கச் செய்யுங்கள்.. முடிந்தவரை, வீட்டில் இருக்கும் நேரங்களில் தொலைக்காட்சி, கணினி விளையாட்டுக்கள், திரைப்படங்கள், உணவக உணவுகள் என அவர்களின் எண்ணங்களை, செயற்கையான விசயத்திலிருந்து வெளிக்கொணர்ந்து, இயல்பான நம் அன்றாட தினசரி வேலைகளில் ஈடுபடச் செய்யுங்கள்.

இன்று பல கல்லூரி மாணவர்கள், அதிலும் முக்கியமாக மருத்துவம் பயிலும் மாணாக்கர் கூட தற்கொலை வரை சுலபமாக முடிவெடுப்பதற்கு மிக முக்கிய காரணம், தம்மையும், தம் சுற்றத்தையும் பேணிட அறியாததால் மட்டுமே!!


குழந்தைகள் ஒன்றும் வீட்டில் வளர்க்கும் ஆர்க்கிட் பூச்செடி அல்ல. பொத்திப் பொத்தி, உரம் போட்டு, நீர் ஊற்றி வளர்க்க.. சிறு வெப்ப நிலை மாறினாலும் அது வாடிப்போய் இறந்துவிடும். மாறாக, அவர்கள் காட்டு மரங்கள்போல் வளர்ந்திட வேண்டும். முறையான வழிகாட்டுதலும், அரவணைப்பும், அக்கறையும் மட்டுமே .. இருத்தல் வேண்டும்.

உங்கள் பெற்றோரிடம் அவர்களை ஒருங்கிணையுங்கள். வாழ்க்கையின் யதார்த்தங்களைக் கற்றுக் கொள்வார்கள். ஒழுக்கத்தையும் தைரியத்தையும் ஒருங்கே பெறுவார்கள். அதீத ஆர்வமும், தேவையற்ற கரிசனையும், எல்லை மீறிய அன்பும், பாராட்டுதலும் அவர்களுக்கு நிச்சயமாக நல்லது அல்ல. சிறு சிறு விசயத்தை நளினமாகக் கையாண்டு, எளிமையாகச் செய்து முடிக்கும் பழக்க வழக்கம் ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு வழிவகுக்கும்...

****

# ஆசிரியர் ஒழுக்க கோவை

**- அகல்யா, கணிதத்துறை -**




சிறந்த நட்பு பழக்க வழக்கங்கள் ஒழுக்கங்கள் கொண்ட முன்மாதிரி மிக்க சமூக முன்னோடியாக செயல்பட வேண்டும். நாம் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராக இருப்பதற்கு தேவையான ஒழுக்கங்கள் பற்றியும் உடற்பயிற்சி மற்றும் சுகாதாரத்தை பேணுதல் சகல சந்தர்ப்பங்களிலும் ஒழுக்கம் மற்றும் விழுமியத்தை பாதுகாக்க கூடியவாறு சுத்தமாக எளிமையான முறையில் ஆடைகளை அணிந்திருக்க வேண்டும். போதை, புகைத்தல் வெற்றிலை சாப்பிட்டால் போன்ற பழக்கங்கள் மற்றும் பல்வகையான முறைகேடான செயல்பாடுகளில் தவிர்ந்தி ருத்தல் ஏனையுயோரையும் தவிர்ந்திருக்க உதவுதல்.

தனிப்பட்ட மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பான அபகீர்த்திக்கு உட்பட்டோருடனான பழக்கங்களில் இருந்து விலகி இருத்தல். நாம் பழகும் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் ஏனையோரின் முன்னிலையில் எமது செல்வநிலை, குடும்பத்தரம் மற்றும் உயர்நிலைகளை கொண்டோருட னான பழக்கங்கள் தொடர்பாக பெருமையுடன் பேசா திருத்தல். தமது செல்வம், குடும்பத்தரம், உயர் பதவி களை கொண்டோருடனான நட்பு இருப்பதாகக் காண்பித்து ஏனைய ஆசிரியர்கள் மாணவர்களை அச்சத்துக்கு உட்படுத்த அல்லது அவர்களுக்குப் பாதிப்புகளை ஏற்படு த்தக் கூடியவரான செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல். மற்றும் அவ்வாறு செயல்படும் நபர்களுக்கு முன்னிலையில் கட்டுப்பாடற்ற பழக்கவழக்கங்களை கொண்டிருத்தல்.

தமது சொந்த வாழ்க்கை மற்றும் சமயம், அரசியல் போன்றவைகள் தொடர்பாக தனிப்பட்ட கருத்தினை அங்கீக ரிக்க மாணவர்களை வலியுறுத்துவதிலிருந்து விலகி, ஏதே னும் பாடங்கள், மொழி அல்லது ஏனைய துறைகள் தொடர்பாக தமது விசேட இயலுமைகளை ஏனைய ஆசிரி யர் களை இழிவு படுத்துவதற்காக பயன்படுத்தாதீர்கள்.

சிறந்த கொள்கைகள் கொண்டுள்ளோர் முன்னிலையில் தீவிரவாத கொள்கையினை கடைபிடிக்காது இருத்தல். மற்றும் தீவிரவாத நிலைப்பாட்டில் இருந்து சமநிலை கொண்ட நபராக செயல்பட அநீதிகள் முறையற்ற பிரிவில் விளைவு ஏற்படுத்தல் ரீதியில் செயற்படுத்தல் மற்றும்

அச்சமூட்டல் போன்றவற்றிலிருந்து தமது சகோதர ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஏனையோரை பாதுகாப்பதற்காக சகல சந்தர்ப்பங்களிலும் தயாராக இருத்தல்.

வகுப்பறை மற்றும் அதற்கு வெளியே மாணவர்களுடன் பழகும் சந்தர்ப்பங்களில் கையடக்க தொலைபேசி பயன்பாட்டினை தவிர்த்துக் கொள்ளல். சகல சந்தர்ப்பங்களிலும் சமூக அங்கீகாரங்களை கௌரவித்து பழக, பழக்க வழக்கங்கள் மற்றும் தனிப்பட்ட ரீதியான கௌரவத்துடன் சகல முறைகளிலும் பிள்ளைகள் மற்றும் முழு சமூகத்திற்கும் முன்மாதிரியாக செயற்படல். மனிதர்கள் மற்றும் மிருகங்கள் தொடர்பாக அநீதிகள் இழைக்கப்படும் சந்தர்ப்பங்களில் தமது கவலையினை வெளிப்படுத்தி, இயற்கையாக அல்லது மனிதனால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் காரணமாக பாதிக்கப்படுவோரை இரக்கத்துடன் நோக்கி அவர்களுக்கு உதவிகளை புரிதல். குலம், நம்பிக்கை, ஆண் பெண் பால் சமூக நிலைமைகள் சமயம் மொழி, பிறப்பிடம் ஆகிய காரணிகளை கருத்தில் கொள்ளாது சகல மாணவர்களுக்கும் நியாயமாகவும் பக்கச்சார்பற்ற அன்பினையும் கருணை பாதுகாப்பினையும் வழங்கல். தமது மாணவர்களை தமது பிள்ளைகள் போன்று அனுகுதல்.

மது விற்பனை நிலையங்கள் சூதாட்டங்கள் இடம்பெறும் அபகீர்த்திக்கு உட்பட்ட இடங்களில் நடமாடக்கூடாது. சூதாட்டம், போதை, புகைத்தல் ஆகிய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டவராக அபகீர்த்திக்கு உட்பட்டவராக செயல்படக்கூடாது. சகல சந்தர்ப்பங்களிலும் நேர்மையான செயல்பாடுகள் மற்றும் உண்மை கூறவும் கட்டுப்படுதல் வேண்டும். வட்டிக்கு நிதி வழங்குதல் உடற் சுகாதாரத்துக்கு மற்றும் சமூக நலனுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய செயல்பாடுகளில் ஈடுபடாதிருத்தல்.

மோதல்களைத் தவிர்த்தல், மனித உரிமை, சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகள் தொடர்பிலான முலான அம்சங்களைப் பின்பற்ற வேண்டியதுடன் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், அவர்களை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுதல் போன்ற முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்பதுடன் அவ்வாறான செயற்பாடுகளுக்கு துணை போகக்கூடாது.

*****



# “இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 16

## கதைகளால் நியமாகி...



### இந்தக்கை

ஒரு நன்றி தெரிவிப்பு நாளில் ஒரு பள்ளி ஆசிரியை தனது முதலாம் வகுப்பு மாணவர்களை அவர்கள் எதற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறார்களோ அதை படமாக வரையும் படி கேட்டார். ஏழ்மையான பின்னணியில் இருந்து வந்த அந்த குட்டி பிள்ளைகள் எதற்கு நன்றி தெரிவிக்க போகிறார்கள் என்று ஆர்வத்துடன் அந்த ஆசிரியை எதிர்பார்த்து இருந்தார்.



அவர்களில் பெரும்பாலானவர்கள் நிறைய உணவுகளையும் கோழிக்கறியையும் படமாக வரைய கூடும் என்று அந்த ஆசிரியை எண்ணினார். ஆனால் சூரி தான் வரைந்த படத்தை கொடுத்த போது ஆசிரியை திகைத்து போய் பின் வாங்கினார். எளிமையாக குழந்தைத்தனமாக வரையப்பட்ட ஒரு கை அது.

ஆனால் யாருடைய கையது? அந்த வேறுபட்ட படத்தால் முழு வகுப்பறையும் ஈர்க்கப்பட்டது. “இது நமக்கு உணவு தரும் கடவுளின் கை என்றுதான் நினைக்கிறேன்” என்றது ஒரு குழந்தை. “இது ஒரு விவசாயி-யோடது. காரணம் அவர்கள் தான் நமக்கு உணவு தருகிறார்கள்” என்றது ஒன்று. “அம்மாவின் கரம் என்றது” மற்றொன்று பின்னர்,

அவர்கள் தங்கள் வேலையை கவனிக்க சென்று விட்டார்கள். ஆசிரியை சூரியின் மேசை மீது குனிந்து “அது யாருடைய கை?” என்று கேட்டார். “இது உங்களுடைய கை தான் டீச்சர்” என்று அவன் முணுமுணுத்தான்.



வகுப்பு இடைவேளை நேரங்களின் போது வளர்ச்சி குன்றிய வருத்தத்தில் வாடிய அந்தச் சிறுவனை தான் கைப்பற்றி அழைத்துச் செல்வது ஆசிரியைக்கு நினைவுக்கு வந்தது. அவர் அடிக்கடி அந்த சிறுவனை அவ்வாறு அழைத்துச் செல்வார். ஆனால் அது அந்த சூரியை பொறுத்தவரை பெரிய விஷயம். சொல்லப் போனால் எல்லோருடைய நன்றி தெரிவிப்பு முறையும் இப்படிப்பட்டது தான். நமக்கு கொடுக்கப்பட்ட பொருள் சார்ந்த விஷயங்களை விட செய்யப்பட்ட உதவிகள் தான்நினைவில் நிற்கின்றன. அவை எவ்வளவு சிறியவையாக இருந்தாலும்.

**நீதி : சிறிய விடயங்கள் தான் பெரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன.**

# வழிகாட்டப்பட்ட கண்டறிமுறை
## (Discovery Method)

- கோ.பிரபாலினி, கணிதத்துறை -

வழிகாட்டப்பட்ட கண்டறிமுறை என்பது ஆசிரியரின் வழிகாட்டலுடன் மாணவர்கள் தாமாகவே செயற்பாடுகளில் ஈடுபட்டு கண்டுபிடிப்பாளராகத் தொழிற்பட்டு விடயங்களை கண்டுபிடித்தலாகும். புதிய விடயங்கள் எண்ணங்களை கட்டியெழுப்புவதற்கான எண்ணங்களையும் தகவல்களையும் கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டல்களையும் ஊக்கல்களையும் வழங்குகின்ற ஒரு பலம் வாய்ந்த அறிவூட்டும் அணுகுமுறையாகும்.



இது இறுதி இலக்குகளை அடைவதில் என்ன கற்கிறோம் என்பதை விட எவ்வாறு கற்கிறோம் என்பதனை விளக்கும் ஓர் அணுகுமுறையாகும். இது மாணவர்களின் உயர் உளத் தொழிற்பாடுகளை விருத்தி செய்கின்ற ஓர் அணுகுமுறையாகும். மேலும் இது தொகுத்தறிமுறையை பயன்படுத்தி கற்பவரை புதிய விடயங்களை கண்டுபிடிப்பதற்கு வழிகாட்டுகின்றது. சுயமாக சூழலிலிருந்து கண்டு பிடிக்க வழிவகுக்கின்றது. இது கட்டுருவாக்க வாதம் மற்றும் சுயகற்றல் கோட்பாடுகளிலிருந்து உருவானது. கற்றலானது சுதந்திரமானதும் நெகிழ்ச்சித் தன்மையானதுமான கண்டுபிடிப்புகளுடன் நிகழ வழிவகுக்கின்றது. ஆசிரியர் வித்தியாசமானதுமான வினாக்களை வினாவி மாணவர்களை கணிப்பிடல், எண்ணங்களின்/ கருத்துக்களின் கருத்தினை கட்டமைப்பினை ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள் கண்டுபிடிப்பர், இவற்றில் தாம் கற்றவற்றை புதிய நிலைமைகளில் பிரயோகித்தல் போன்றன வழிகாட்டப்பட்ட கண்டறிமுறையின் படிகளாகும். ஆசிரியரானவர் மாணவர்களுக்கு பொருத்தமான தர உள்ளீடுகள் சாதனங்களை வழங்குதல் வேண்டும். உசிதமான கற்றல் சூழலை உருவாக்க வேண்டும், மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடுவதற்கான நேரம் திருத்தமாக ஒதுக்கப்பட வேண்டும், மாணவர்கள் தாமாக செயற்பாடுகளில் ஈடுபட்டு கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்கான பொறுப்புக்கூறுபவராக ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும், மாணவர்கள் கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்கான பின்னணி அறிவினை வழங்க வேண்டும், ஆசிரியர் மாணவர்கள் தகவல்களை சேகரிக்கும் போது ஆசிரியர் விடயங்களை சொல்லிக்கொடுப்பவராக இராது வழிகாட்டுபவராகவும் ஆலோசகராகவும் இருத்தல் வேண்டும்.

*****

## வடுக்களும் வலிகளும்

மறந்து விடச் சொல்கிறீர்கள் - மன்னித்து
புரிந்து வாழச் சொல்கின்றீர்கள்
மன்னித்து விடுகின்றேன் - ஆனால்
மறக்க சொல்லித் தாருங்கள்

எதை மறந்து விடுவது - தாண்டி
சென்ற என் சிறு பருவத்தையா - பூட்டி
வைத்த என் பெட்டகக் கனவையா
இழந்த என் உறவுகளையா - உருக்குலைந்த
என் ஊரையா.....


மறந்து போவதற்கும், மன்னித்து வாழ் வதற்கும்
நான் ஒன்றும் மகாத்மா அல்ல
அழித்து விட்டு வாழ அவை - என்
நினைவுகளும் அல்ல
சிதைத்து விட்டுக் கட்டி விட - இடிந்த எம்
வீடுகளும் அல்ல

இறந்த தாயின் மார்பில் பாலருந்திய - அந்த
மழலையின் அழுகுரலும் - அடுத்த
நிமிடம் நாம் இருப்போமா, இறப்போமா என்று
தெரியாமல் நிலை குலைந்த - எம்
இதய ரணங்கள் ஒவ்வொன்றும் இருக்கும் வரை
மறக்கவும் மாட்டோம் . நாங்கள்
மன்னிக்கவும் மாட்டோம்

மன்னித்து விடுங்கள் முடிந்தால் - எமக்கு
மன்னிக்க சொல்லித் தாருங்கள்
மே - 18
துரோகத்தால் ஓர் இனம்
நிலை குலைந்த நாள்

**- சி.அகலிசை (வீரப்பெண்) -**

# பேசும் படங்கள்...!




- N. Sastikka, Science Course -

